செய்தி வெளியீடு எண். 240 நாள்: 05.05.2018

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தில் 313 பயனாளிகளுக்கு 2504 கிராம் (313 சவரன்) தங்கத்தினையும் ரூ. 87.50 இலட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டத்தில் 313 பயனாளிகளுக்கு 2504 கிராம் (313 சவரன்) தங்கத்தினையும் ரூ. 87.50 இலட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.05.2018) வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் சமூக நலத்துறையின் சார்பாக மூவலூர் இராமாமிர்த அம்மையார் திருமண நிதி உதவி திட்டத்தில் திருமணத்திற்கு தாலிக்கு தலா 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம் 2017-2018 முதல் சிறப்பாக வழங்கப்படுகிறது. இதுவரை திருவள்ளூர் மாவட்டத்தில் 34245 நபர்களுக்கு ரூ.110 கோடியே 57 இலட்சத்தி 75 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதியுதவிகளையும், 155.384 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. இன்று திருவள்ளூர், கடம்பத்தூர், திருவாலங்காடு, பூண்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 313 நபர்களில் பட்டம் மற்றும் பட்டயம் படித்த 37 நபர்களுக்கும், 10-ம் / 12-ம் வகுப்பு படித்த 276 நபர்களுக்கு ரூ. 87.50 இலட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவிகளையும், 2504 கிராம் (313 சவரன்) தங்கம் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள் அனைவரும் அரசின் அனைத்து திட்டங்களையும் நன்கு தெரிந்துக்கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) திருமதி.சு.சண்முகவள்ளி, விரிவாக்க அலுவலூர் திருமதி. கலைச்செல்வி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**